சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 10.03.2023

ம.சா.1– ஐஸ்வர்யா த/பெ –நாகூர்முத்து

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு விவரம் அனைத்தும் எனக்கு தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் காதல் திருமணம் என்றால் சரிதான். எங்கள் திருமணம் நடந்த தேதி 17.04.2019. எங்களது திருமணம் காதல் திருமணம் என்பதால் எனது பெற்றோரிடம் இருந்து பாதுகாப்பு கேட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கு புகார் மனு ரசீது கொடுத்தார்கள். திருமணத்தின் போது நான் அணிந்து வந்த நகைகள் அனைத்தும் எதிர்மனுதாரர் வசம் உள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 15.10.2021ம் தேதி எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து எனது குழந்தைக்கு மது கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 16.10.2021ம் தேதி எதிர்மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை அசிங்கமாக திட்டி தடுக்க வந்த எனது அப்பாவை தாக்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது காதல் திருமணம் எனது பெற்றோருக்கு பிடிக்கவில்லை என்பதால் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)